# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 - 2012

# வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................ நேரம்: 90 மணித்துளிகள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

எ+கா: 1. தாயிற் சிறந்தொரு <u>கோவிலும்</u> இல்லை.
( பள்ளியும், வீடும், கோவிலும் )

1. திருக்குறளை இயற்றியவர் ____________________.
( மோசிகீரனார், திருவள்ளுவர், ஔவையார் )

2. கதிர்மாநாயகம் என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட வன்னி மன்னன் ____________________
( காக்கைவன்னியன், பண்டாரவன்னியன், சங்கிலியன் )

3. அதியமானைக் காணத் தகடூருக்குச் சென்ற புலவர் ____________________.
( ஔவையார், கபிலர், சேரன் )

4. பாட்டியாக நடித்துச் சிறுமியை ஏமாற்றிய விலங்கு ____________________.
( நாய், நரி, ஓநாய் )

5. கலைச்செல்வன் ________________ தனது பிறந்தநாளைக் கொண்டாட விரும்பினான்.
( உறவினருடன், நண்பர்களுடன், பெற்றோருடன் )

6. ____________________விடிய விடிய நடைபெறும்.
( நடனம், கூத்துகள், அரங்கேற்றம் )

7. தமிழருடைய வீரத்தைக் கூறும் நூல் ____________________.
( சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு )

8. உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்று ________________.
( தமிழ், ஆங்கிலம், வடமொழி )

9. திருக்குறளின் வேறு பெயர் ____________________.
( ஆத்திசூடி, பொதுமறை, கவிக்கொத்து )

10. வன்னிப்பகுதி ____________________ என்றும் அழைக்கப்பட்டது.
( அடங்காப்பற்று, தமிழ்நாடு, யாழ்ப்பாணம் )

11. அதியமான் காட்டில் பறித்த கனியின் பெயர் ________________.
( மாங்கனி, நெல்லிக்கனி, முக்கனி )

12. அறநெறி நூல்களில் ஒன்று ____________________ ஆகும்.
( சிலப்பதிகாரம், புறநானூறு, நாலடியார் )

13. வீட்டுக்கு வருபவர்களை நாம் ____________________ வரவேற்க வேண்டும்.
( அன்புடன், கோபத்துடன், வெறுப்புடன் )

14. இனியன் கண்டெடுத்த பையை ________________ ஒப்படைத்தான்.
( அஞ்சலகத்தில், காவல்நிலையத்தில், மருந்தகத்தில் )

15. மரங்கள் ____________________ பசுமையாகக் காட்சியளிக்கும்.
( மாரி காலத்தில், கோடைகாலத்தில், குளிர்காலத்தில் )

16. இலங்கையில் கூத்துகள் நடைபெறும் இடங்களில் ஒன்று
____________________ ( புத்தளம், மட்டக்களப்பு, வவுனியா )

17. நான் தண்ணீரை ________________ என்று குடித்தேன்.
( மடமட, மளமள, மணிமணி )

18. 90 என்பதை எழுத்தில் எழுதினால் ________________.
( தொன்னூறு, தொந்நூறு, தொண்ணூறு )

19. பள்ளியில் நீண்ட விடுமுறை விடப்படும் காலம் ____________________.
( கோடைகாலம், பனிகாலம், இலை உதிர்காலம் )

20. பொங்கல் விழா கொண்டாடப்படும் மாதம் ____________________
( புரட்டாதி, தை, மார்கழி )

( புள்ளிகள் 20)

2) உறுப்பமைய எழுதுக.

திருக்குறள் பொதுவான ஒழுக்கங்களைக் கூறும் அறநூல்.

______________________________________________

(புள்ளிகள் 05)


3) சரியாயின் **சரி** என்றும் பிழையாயின் **பிழை** என்றும் அடைப்புக் குறிக்குள் எழுதுக.

எ + கா: சுற்றுலா செல்ல உகந்த காலம் கோடைகாலம் ( சரி )

1. தமிழில் இயல் இசை நாடகம் என மூன்று பிரிவுகள் உண்டு. (_____)
2. மா பலா வாழை என்பன முக்கனிகள் ஆகும். (_____)
3. கூத்து என்பது இயலில் அடங்கும். (_____)
4. தமிழ்மொழி உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்று. (_____)
5. பூ + சாடி என்பதைச் சேர்த்து எழுதினால் வருவது பூசாடி. (_____)

( புள்ளிகள் 10)

4. கீறிட்ட இடத்தில் பொருத்தமாக எழுதுக.




எ+கா:-

எனது வீடு கிழக்குத் திக்கில் உள்ளது.

1. மருத்துவமனை ________________த் திக்கில் உள்ளது.

2. கதிரவன் ________________த் திக்கில் காலிக்கும்.

3. ________________ தெற்குத் திக்கில் உள்ளது.

4. விளையாடுவதற்கு நான் ________________ திக்கை நோக்கிச் செல்ல வேண்டும்.

(புள்ளிகள் 10)

## 5) சொற்களைப் பிரித்து எழுதுவோம்.

எ+கா:-

பூச்சாடி = பூ + சாடி

1. உடற்பயிற்சி = ____________ + ____________

2. முல்லைக்கொடி = ____________ + ____________

3. தைப்பொங்கல் = ____________ + ____________

4. பாடற்போட்டி = ____________ + ____________

5. பலாப்பழம் = ____________ + ____________

(புள்ளிகள் 05)

## 6) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுற்றுலாச் | நீந்துவர் | நீண்ட | ~~சிறுவர்களுக்குக்~~ | மணல்வீடு | ஆடியும் |

கோடைகாலம் வந்தாலே சிறுவர்களுக்குக் கொண்டாட்டம் தான். கோடை காலத்தில் ____________ பள்ளி விடுமுறை விடப்படும். அவர்கள் குடும்பத்துடன் ____________ செல்வர். நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று விளையாடுவர். கடற்கரைக்குச் சென்று ____________ கட்டி விளையாடி மகிழ்ச்சியாக இருப்பர். நீச்சல் தடாகங்களுக்குச் சென்று ____________. பூங்காவில் ஊஞ்சல் ____________ பந்தடித்தும் தமது பொழுதைக் கழிப்பர்.

(புள்ளிகள் 10)

7.) **பொருத்தமான முடிக்கும் சொற்களை வைத்து, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

எ+கா:- வளவன் நன்றாகத் தேர்வு ______ எழுதினான் ______.

1. புறநானூறு தமிழருடைய வீரத்தைக் ______________________.
2. நாம் எப்போதும் உண்மை பேச ______________________.
3. வள்ளுவரால் திருக்குறள் ______________________.
4. நாம் என்றும் ஒற்றுமையாக இருக்க ______________________.
5. மாமாவின் அஞ்சல் நேற்றுக் ______________________.

(புள்ளிகள் 10)

8) **கீறிட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலகல | மளமள | படபட | ~~கீச்கீச்~~ | சொரசொர | சலசல |

எ-கா:- குருவிக் குஞ்சு கீச்கீச் எனக் கத்தியது.

1. சேரன் கணக்கை ______________ என்று செய்து முடித்தான்.
2. நரிப்பாட்டியின் கை ______________ என இருந்தது.
3. பயத்தினால் கண்ணனின் இதயம் ______________ என்று அடித்தது.
4. ஆற்றுநீர் ______________ என ஓடியது.
5. தங்கை ______________ எனச் சிரித்தாள்.

(புள்ளிகள் 05

9) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழு விடை எழுதுக.

ஆதிரை மூன்றாம் வகுப்பில் படிக்கிறாள். அவள் மிகவும் நல்ல சிறுமி. அவளிடம் நல்ல பழக்கங்கள் உண்டு. அவள் எப்போதும் தூய்மையாக இருப்பாள். தூய்மையான ஆடைகளையே அணிவாள். தன் விரல் நகங்களையும் தூய்மையாக வைத்திருப்பாள். ஆதிரை கீரை வகைகளையும் காய்கறிகளையும் தனது உணவில் சேர்த்துக் கொள்வாள். ஒவ்வொரு நாளும் பழங்கள் உண்பாள். அவள் பல் துலக்கிய பின்னரே படுக்கைக்குச் செல்வாள். ஆதிரை பெரியவர்களை மதித்து நடப்பாள். பிறருக்கு உதவி செய்யும் பண்பும் உடையவள். அவள் படிப்பிலும் கெட்டிக்காரி.

எ+கா: ஆதிரை எந்த வகுப்பில் படிக்கிறாள்?
ஆதிரை மூன்றாம் வகுப்பில் படிக்கிறாள்.

1. ஆதிரை எப்போதும் எப்படி இருப்பாள்?

2. ஆதிரை தனது உணவில் எவற்றைச் சேர்த்துக் கொள்வாள்?


3. ஆதிரையின் இரு நற்பழக்கவழக்கங்கள் தருக?

4 படுக்கைக்குச் செல்ல முன் ஆதிரை என்ன செய்வாள்?

5. ஆதிரை எத்தகைய ஆடைகளை அணிவாள்?

(புள்ளிகள் 10)

**10) படத்தைப் பார்த்து, ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.**



(புள்ளிகள் 15)